## 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **C** . ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

MCOP.No.70/ 2022 dated: 28.11.2024 ம.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மஞ்சுளாதேவி | தொழில் | : கூலிவேலை |
| க/பெ | ரத்தினசாமி | கிராமம் | : சாளையூர் |
| வயது | 30 | தாலுகா | : உடுமலைப்பேட்டை |
| | | மாவட்டம்ம் | திருப்பூர் |

நான் மனுவில் 1–ம் மனுதாரர். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் நான் கூறியவை தான், இதர மனுதாரர்களுக்காகவும், இந்த நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன்.

ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை

ம.சா.ஆ.2 2–ம் எதிர்மனுதாரரின் பாலிசி நகல்

ம.சா.ஆ.3 இறுதி அறிக்கை நகல்

ம.சா.ஆ.4 பிரேத பரிசோதனை அறிக்கை

ம.சா.ஆ.5 ரத்தினசாமியின் இறப்பு சான்றிதழ்

ம.சா.ஆ.6 எனது வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.7 எனது ஆதார்கார்டு ஜெராக்ஸ் நகல்

ம.சா.ஆ.8 2–ம் எதிர்மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல்

ம.சா.ஆ.9 3–ம் எதிர்மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல்

ம.சா.ஆ.10 4–ம் எதிர்மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல்

ம.சா.ஆ.11 4–ம் எதிர்மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல்

ம.சா.ஆ.12 வாரிசு சான்றிதழ்

ம.சா.ஆ.13 பார்வை மகஜர்

ம.சா.ஆ.14 TN 41W 4882 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர்

அறிக்கை

ம.சா.ஆ.15 இறந்துபோன ரத்தினசாமியின் ஆதார் அட்டை நகல்

ம.சா.ஆ.16 TN 78W 7956 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை

(ம.சா.ஆ.16 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது கணவர் விபத்தின்போது ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தெரியவில்லை. என் கணவர் விபத்தின்போது TN 78W 7956 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். அப்போது அந்த வாகனத்திற்கு காப்பீடு சான்று எதுவும் கிடையாது என்றால் தெரியவில்லை. ம.சா.ஆ.16 ஆவணம் வாகனத்தின் பதிவு எண் என்னால் திருத்தப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. திருத்தம் செய்யப்பட்டதற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் சுருக்கொப்பம் இடவில்லை என்றால் சரிதான். புகாரில் என் கணவர் மீது மோதிய வாகனம் குறிப்பிட்டு தெரியாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத வாகன ஓட்டுநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் சுப்பிரமணியன் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவரை எனக்கு தெரியாது. இறுதிஅறிக்கையில் தான் சுப்பிரமணியன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றும் அதற்கு முன்பு அவர் எவ்வகையில் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தேங்காய் வியாபாரம் செய்து என் கணவர் மாதம் ரூ.15,000/- சம்பாதித்ததாக கூறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் கூலி வேலை செய்தார் என்றால் சரிதான். என் கணவர் ஓட்டி சென்ற வாகனம் ரங்கசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். என் கணவர் விபத்தின்போது கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் ஓட்டி சென்று அவரே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும் 1-ம் எதிர்மனுதாரர் இந்த

விபத்தில் சம்பந்தப்படவில்லை என்றால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஓம். C. ராஜலிங்கம் B.A.,B.L.,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.